**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Calender Case** **CC. 21/2015**

**Miscellaneous**

**Preliminary Register**

**Sessions**

**Deposition of witnesses for** **P**W - 3

| | | |
|---|---|---|
| **Name** | : | ராமசாமி |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1873 of the day of 21-12-2022**

**முதல் விசாரணை**

நான் தோப்பூரில் குடியிருந்து வருகிறேன். நான் ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்சமயம் டான்சியில் பாதுகாப்பு பணியில் உள்ளேன். அ.சா.1 வேலுச்சாமியை எனக்கு தெரியும். ஆஜர் 6 வது எதிரியை எனக்கு தெரியாது. எனக்கு இரவு நேரத்தில் மட்டும் பணி நேரமாகும். கடந்த 25.06.2013 அன்று நான் பணிக்கு மாலை 6.00 மணிக்கு வந்தபோது தேசிய நெடுஞ்சாலை டி.எண்.28 வி 6162 என்ற லாரியானது நின்று கொண்டிருந்தது. அந்த லாரியானது குடோனுக்கு வெளியே நின்று கொண்டிருந்தது. நின்று கொண்டிருந்ததை நான் பார்த்துவிட்டு பணிக்கு சென்றுவிட்டேன். எனக்கு தெற்கு பக்கம் பணி இருந்தது. மேற்படி லாரியானது கிழமேலாக நின்று கொண்டிருந்தது. நான் அவ்வப்போது வண்டியை பார்த்துக் கொண்டு தான் இருந்தேன். இரவு 1.00 மணிக்கு மேல் வண்டியை யாரோ எடுத்துச் செல்வதாக சத்தம் கேட்டு வந்து பார்த்தேன். அந்த வண்டியானது வடக்கு பக்கமாக வேகமாக சென்று கொண்டிருந்தது. மேற்படி வண்டியை யார் எடுத்துச் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

குடோனுக்கு வெளியே எப்போது 20, 30 லாரிகள் நின்று கொண்டிருக்கும் என்றால் சரியல்ல. குடோனுக்கு வெளியே வண்டியை நிறுத்துவதற்கு அனுமதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வழங்கப்பட்ட இரவு பணியானது

என்னுடைய நிறுவனத்திற்கும் வாகனங்கள் அனைத்தையும் பாதுகாப்பதற்கு ஆகும் என்றால் சரிதான். அந்த வழக்கில் காணாமல் போனது பற்றி சொல்லக்கூடிய டி.என். 28 பி 6162 என்ற எண் கொண்ட லாரியானது தேசிய நெடுஞ்சாலையில் நிறுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த மாதிரி நிறுத்தப்பட்ட வாகனத்தில் எப்பொழுதும் டிரைவரோ கிளினரோ இருப்பார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த லாரியில் யார் இருப்பார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. லாரியை யார் எடுத்துச் சென்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.